சுதந்திர சந்திரிகா

Aug 1947

JL
LBM 211/N37
N47.9.8
188819

வைத்திய

ந்திரிகா




# वैद्यचान्द्रिका

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்திரிகை.

Vol. 9 | August, 1947 | No. 8



JL
Bനമ11, N39
N147.9.8
18889



...ஜ ராஸ்த்ரீ, ஆயுர்வேதாசார்ய.

...வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.

...ண்டித ஸ்ரீ. மெ. ஸுந்தரராஜாசார்யர்.

வைத்ய வாசஸ்பதி பண்டிட்

## P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டு பிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி ஸஞ்சீவி"

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டுகளை எந்நிலைமையிலும்
போக்குவதிலும் வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்.
எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—

## ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,

கரூர், S. I. Ry.



# MODEL PHARMACY,
## BEZWADA.



MP's மாடல் பார்மஸியின்
கைகண்ட ஔஷதங்கள்

பிளட்-டோன்: இரத்த வீர்ய விருத்திக்கும் இதர கோளாறுகளுக்கும் இன்றியமையாத ஓர் பெரிய டானிக்.

காப்பின்ஸ்: இருமல் ஜலதோஷம் இவைகளுக்கு ஓர் கைகண்ட ஔஷதம்

மலேனல்: மலேரியா ஜுரத்திற்கு கொய்னா சம்பந்தமில்லாத ஔஷதம்

[illegible]: ஸ்திரீகளின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது

சிசுடோன்: குழந்தைகள் தேக வளர்ச்சிக்கு ஓர் சஞ்சீவி

மில்கோபின்: தாய்மார்களுக்கு குழந்தைகளுக்குத் தேவையான தாய்ப்பாலை அதிகரிக்கவல்ல சிறந்த ஔஷதம்

மாடல் பார்மஸி, பெஜவாடா.

பூர்ண விற்பனை உரிமையாளர்:
ராஜா ராம்சந்தர் & கம்பெனி,
520. திருவல்லிக்கேணி ஹைரோட், மதராஸ்-5.

Sole Distributors: RAJA RAMCHANDER & Co.,
520, High Road Triplicane, Madras—5

**Stocks available from:**

Appah & Co. Esplanade, Madras.

South Indian Medical Stores Ltd., Raja Street, Coimbatore.

The Trichy Ayurvedic Union Ltd., Chinnakadai Street, Trichinopoly.

Sivanandam & Co, 7, East Avani moolai Street, Madura.

The Erode Medical Supplies Ltd., Erode.

Kandan Drug Stores, Mettupalyam.

General Stores Canteen, Nursing Home, Dharapuram.

Messrs. C. Arumugam Pillai & Sons Shop-keepers & General Merchants, Dindigal.

Chandra Pharmacy, Rama Nilayam, North main Street, Pudukkottah.

The Ideal Agencies, Singh Medical Hall. Chekkalai Road, Karaikudi.

# GERMOL.

:: ஜெர்மால். ::

சொறி, சிரங்குகள், மூன்று நாளில் குணம்.

SCIENTIFIC INDUSTRIALS,
13. BROUGH ROAD,
ERODE. S. I.


## பிரார்த்தனை.

வைத்திய ஸஹோதரர்களே !

प्रचारः संघशक्तिश्च सिद्धेः परमसाधनम् ।

பிரசாரமும் ஸங்க சக்தியும் கார்யஸித்திக்குச் சிறந்த ஸாதனங்கள் என்று தாங்கள் அறிந்ததே. ஆகவே, பொது ஜனங்களிடையே ஆயுர்வேதத்தின் மகத்துவத்தைப் பிரசாரம் செய்ய பரம சாதனமான வைத்திய சந்த்ரிகைக்குத் தங்களுடைய நண்பர்கள் யாவரையும் சந்தாதாரர்களாக்கி படிக்கும்படி செய்யுங்கள்.

வைத்தியர்களையும், அபிமானிகளையும் மண்டலத்திற்கு அங்கத்தினர்களாகச் சேருங்கள். வைத்திய சந்த்ரிகைக்கும் ஆரோக்கிய சந்த்ரிகைக்கும் விஷய தானம் செய்யுங்கள்.

மண்டல வருஷச் சந்தாவை அனுப்பாதவர்கள் தயவு செய்து உடனே அனுப்பி விடுங்கள்.




ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்த்ரிகா.


தொகுதி 9.] ஆகஸ்டு, 1947 [பகுதி 8



ஆரோக்ய சந்த்ரிகா —
சிசு பரிபாலனம் ... 171
வைத்ய சந்த்ரிகா —
மந்திரியின் மனப்போக்கு— (ஆசிரியர்) 183
ப்ரஹ்மஸ்ரீ K. G. நடேச சாஸ்திரிகள் ... 185
விசேஷ அறிவிப்பு ... 194
ஸமயோசிதம் ... 195
புதிய இந்திய வைத்ய கல்லூரி ... 203
வைத்தியர்கள் உடனே செய்யவேண்டிய காரியம் ... 203
செய்திக் குறிப்புகள் ... 205
ஸம்ஸ்க்ருதாநுபந்தம் (தனி) ... 1—14

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலம்.

அகில பாரத வர்ஷீய ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தின்
தமிழ்நாடு கிளைச்சங்கம்.

வருஷச் சந்தா ரூ. 3-0-0.

ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, M. A. L. I. M.
பொதுக் காரியதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
9. கேசவபெருமாள் மேலத்தெரு; மைலாப்பூர், மதராஸ்.

என்ற விலாஸத்திற்கு மண்டலத்தின் பொது நிர்வாஹ விஷயங்களைப்பற்றி எழுதிக்கொள்ள வேண்டும்.

## வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்
மாதப் பத்திரிகை.

இங்கிலீஷ் மாதம் முதல் வாரத்தில் வெளியாகும்.
மண்டல அங்கத்தினர்களுக்கு இனமாய் அனுப்பப்படும்.

ஸ்ரீ A. ராகவராவ், A. L. I. M.
உபகார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
17. சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சினாப்பள்ளி.

என்ற விலாஸத்திற்கு மண்டலத்தின் சந்தாத்தொகை அனுப்பவேண்டும். வைத்திய சந்திரிகையின் விளம்பர விஷயங்கள், சந்தாதாரரின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ந் தேதிக்குள் சந்திரிகை கிடைக்காவிடில் உடனே தெரிவித்தல், மற்றும் வைத்திய சந்திரிகையின் நிர்வாஹத்தைப் பற்றிய விஷயங்களுக்கும் எழுதிக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரி, ஆயுர்வேதாசார்ய,
ஆசிரியர்: வைத்திய சந்திரிகா,
ஆத்ரேயாசிரமம், தென்னூர் ரோடு, திருச்சினாப்பள்ளி.

என்ற விலாஸத்திற்கு வைத்திய சந்திரிகையிலும் ஆரோக்கிய சந்திரிகையிலும் பிரசுரம் செய்யவேண்டிய கட்டுரைகள், செய்திக் குறிப்புகள், ஸந்தேஹங்கள், பதில்கள், சர்ச்சைகள், ரோகக் குறிப்புகள் (Case Sheets) விமர்சத்திற்குப் புத்தகங்கள், பதில் பத்திரிகைகள் இது போன்றவைகள் எல்லாம் பிரதி இங்கிலீஷ் மாதம் 15-தேதிக்குள் ஆசிரியருக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

1888



# சிசு பரிபாலனம்.

[ப. P. S. ராமசர்மா, கரூர்.]

जगन्मातुः स्तन्यं मधुरममृतादप्यनुपमं
पिबन्तौ क्रीडन्तौ निजचरणभक्तान्तरतले ।
कुमारावाद्यौ तौ गजमुखषडास्यौ मम सदा
विधत्तां चातुर्यं निखिलशिशुसंरक्षणविधौ ॥

[பொருள்— உலகத்திற்கே மாதாவாகிய அம்பிகையின், அம்ருதத்தை விட இனிப்பாயும், மூப்பு, மரணம் இவற்றைப் போக்கும் குணத்தைத் தவிர இன்னும் பல குணங்கள் பொருந்தி, பேரறிவையும் பேரின்பத்தையும் தருவதால் உபமானமற்றதாயும் உள்ள தாய்ப் பாலைக் குடித்து அதன் பலத்தினால் ஏற்பட்ட உத்ஸாஹத்தால் தனது பக்தர்கள் உள்ளமாகிய மைதானத்தில் எப்பொழுதும் பல விதமான விளையாட்டுக்களைச் செய்கின்ற யானைமுகக் கடவுளும் ஆறுமுகக் கடவுளுமான ஆதி குமாரர்கள் நான் துவக்கி இருக்கும் இந்த சிசு பரிபாலனம் என்னும் வியாசம் எழுதும் காரியத்தில் எனக்கு மிகுந்த சாமர்த்தியத்தை அளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.]

**பெரியோர்களே, அறிவாளிகளே!**

சிசு பரிபாலனம் என்னும் விஷயத்தைக் குறித்து சிறிது எழுத ஆவல் கொள்கிறேன். ஆனால் அதில் எனக்குத் திறமை இல்லை என்று நானே அறிவேன். விஷயத்தை விளக்கப் போதுமான திறமை யற்றிருந்தாலும், சொல்லழகு ஸாஹித்தியம் இவைகளாலும் வாசகர்களை திருப்தி செய்துவைக்கத் தகுந்த பாண்டித்யமும் என்னிடம் கிடையாது. முடிவில் சிசு பரிபாலனத்தைத் தழுவி எழுதும் என்னையும் தாங்கள் ஒரு சிசுவாகப் பாவித்து சிசுபரிபாலனத்தைப் படித்ததின் பலனாக உடனடியாக சிசுவான என்னை பரிபாலனம் செய்வீர்கள் என்று நம்பி அப்பியாச முறையில் சிறிது எழுதத் துணிந்தேன்.

முதலில் மனிதனின் சக்தியை (பலத்தை) சரீர சக்தி, மனோ சக்தி, இந்திரிய சக்தி, ஆத்ம சக்தி என்று நான்கு

விதங்களாகப் பிரித்துக் கூறலாம். இதை மறுபடியும் இயற்கை, செயற்கை என்ற இரண்டு விதமாகப் பிரிக்க லாம். அதில் இயற்கை சக்தி என்பது ஜீவன்களின் முன் ஜன்மத்திய கர்மத்தை யொட்டி தாய் தந்தையின் சரீரங் களை அனுசரித்து பிறவியிலேயே அமையப் பெற்றது. செயற்கை பலம் பிறந்த பிறகு செய்யப்படும் வைத்தியம் வளர்ப்பு வழிகள் இவற்றால் உண்டுபண்ணப்படுகிறது.

முன் ஜன்மத்து வினையினால் கட்டுப் படுத்தப்பட்ட ஜீவன் தனது வினைக்குத் தகுந்த பலத்தை அடைவதற்குத் தகுதியான தாய் தந்தைகள் மூலம் சரீரத்தை ஏற்படுத்திக் கொண்டு தன் கர்மானுகுணமான பலனை அடைய நேரிடு கிறது. தாயின் கர்பத்தை அடைந்த கருவைத் தகுதியான போஷணைகளால் வளர்த்து, சரியான காலத்தில் பிரஸ விக்கச் செய்து, அந்த சிசுவை நல்ல முறையில் வளர்த்து தேசத்துக்கும் தனக்கும் உபயோகப்படுமாறு செய்வதே செயற்கை பலத்தின் பிரயோஜனம். இயற்கை பலம் குறைந்திருந்தாலும், விடாமுயற்சியுடன் செய்யப்படும் செயற்கை முறைகளால் நல்ல பலனை அடைய முடியும் என்பதே சாஸ்திரங்களின் தீர்மானம். உதாரணமாக பூமி செழிப்புக் குறைந்திருந்த போதிலும் நல்ல எருக்களால் பயிர் நல்ல பலனைத் தரக் கூடியதாகக் காண்கிறோம். ஒட்டு மரங்கள் சாதாரண மரங்களைவிட நல்ல பலனைக் கொடுத்து வருகின்றன. ஆனால் இயற்கை பலமும் செயற்கை பல மும் சேர்ந்தால் அதிகப் புஷ்டியைத் தரும்.

இவ்விதம் செய்யப்படும் செயற்கை முறையை இரு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது, சரீரத்தில் வியாதி வராமல் காப்பாற்றி சரீரத்தை வளர்ப்பது. இரண்டா வது, ஏற்பட்ட வியாதியை நீக்கி மீண்டும் உடல் வலிவு உண்டு பண்ணுவது. இவ்விதம் சரீரம், மனது, இந்த்ரியங் கள், ஆத்மா இந் நான்குக்கும் பிணி வராமல் தடுத்தும், வந்த பிணியைப் போக்கி அவற்றை வளர்த்தும் வருவது, அவற்றிற்குத் தகுதியான வலுவை உண்டு பண்ணவே. சரீர பலம் இந்திரிய பலத்தையும், இந்திரிய பலம் மனோ பலத்தையும், மனோ பலம் ஆத்ம பலத்தையும் அதிகப்



படுத்த முடியும். ஆனால் இவை ஒன்று மற்றொன்றுக்குக் காரண பலமாகத் தீர்மானித்துச் சொல்ல முடியாது. சரீர பலம் இல்லாத பலர் மனோ பலம் ஆத்ம பலம் இவைகளை உடையவர்களாகக் காணப் படுகிறார்கள். ஆத்ம பலத்தை பற்றிக் கேள்விப் பட்டிராத பலர் சரீர பலம் இந்திரிய பலம் இவைகளை உடையவர்களாகக் காணப் படுகிறார்கள். ஆகையால் இவை ஒன்றுக் கொன்று காரணமாகக் கருத முடிய வில்லை. உட்கொள்ளும் ஆகாரங்களின் குணங்க ளால் அந்தந்த பலங்கள் வளர்க்கப் படுகின்றன.

இயற்கையிலும் ஒன்றிருந்து ஒன்றில்லாமல் தான் காணப் படுகிறது. க்ஷயம் முதலிய சில வியாதிகளில் சரீர பலம் முற்றிலும் போன பிறகு கூட இந்திரியாதிகளுக்கு பலம் காணப் படுகிறது. ஆனால் ஆத்ம பலம் எல்லா பலங் களையும் உண்டு பண்ணும் என்பது யோகிகள் அறிந்த உண்மை. மனோ பலத்தால் சில சந்தர்பங்களில் சிலர் தன் னால் செய்ய முடியாத காரியங்களைச் செய்து விடுகிறார்கள். அதனால் மனோ பலம் எல்லா பலத்தையும் உண்டு பண்ணும் என்பது முற்றிலும் சரியல்ல. அதிகமான காமக் குரோ தாதிகளால் உத்வேகப் படுத்தப் பட்ட மனது தன் உட லின் எல்லா சக்திகளையும் ஏக காலத்தில் உபயோகப் படுத் திக் கொள்வதால் அவ்விதம் நடக்கிறது. அவ்விதம் சில சமயங்களில் மனோ பலத்தால் அதிக சக்தியை உபயோகப் படுத்தும்படி நேர்ந்தால் அந்தக் களைப்புத் தீர சரீராதிகளு க்கு மிகுந்த காலம் ஓய்வு வேண்டியிருக்கிறது. ஆகையால் குழந்தைகளுக்கு இயற்கை, செயற்கை என்ற இரு வித மான சரீராதி பலங்கள் நன்றாக அமையும்படி செய்தால் தான் அந்த தேசத்து மனிதர்கள் இஹ பர பலன் களுக்கு ஆளாவார்கள்.

இந்தக் குழந்தை மருத்துவம் (சிசு பரிபாலனம்) மூன்று கிளைகளாகப் பிரிக்கப்படவேண்டும். முதலாவது தாயின் கர்பத்தில் இருக்கும் கருவை கெடுதல்கள் அணுகா மல் நல்ல நிலைமையில் வளர்த்துக் காப்பாற்றுவது. இரண் டாவது, பிறந்த குழந்தைக்கு பிணி வராமல் நல்ல சரீரத் துடன் வளரச் செய்வது. மூன்றாவது, ஏற்பட்ட வியாதி

களை நீக்கி நல்ல ஆரோக்யத்தை உண்டு பண்ணுவது. இவ்விதம் நமது தேசத்தில் அனாதி காலம் முதல் நல்ல நிலையை அடைந்து வந்த இந்நூல் ஸ்வதந்திரத்தை இழந்து பிறரின் நிழலில் வளரவேண்டி வந்த நமது துரதிருஷ்டத்தால் செயற்கை பலம் முற்றிலும் போன போதிலும் த்ரிகால ஞானிகளான மஹான்களால் இயற்றப்பட்டிருப்பதால் இயற்கை பலத்தின் மேன்மையால் இன்றும் Modern Scientific System என்றெல்லாம் அழைக்கப்படும் அலோபதிக் முதலிய முறைகளை விட பொது மக்களின் முன்னிலையில் அதிக பலனைத் தருவதாகவே இருந்து வருகிறது. நல்ல அறிவாளிகளின் மூலம் நல்ல ஆராய்ச்சிகள் செய்ய அரசாங்கம் முன் வருமாயின் சிற்றின்பத்தை போதிக்கும் (கொக்கோகம்) காம சாஸ்திரம் முதல் பேரின்பத்தைத் தரும் ஞான நூல்கள் வரையிலும் சற்றும் பிசகாது உண்மைத் தத்துவங்களை விளக்குவதில் நமது தேசிய கலைகளோடு போட்டி போடுவதற்கு இவ்வுலகத்தில் எந்த தேசமும் முன் வர முடியாது என்பது முற்றிலும் அறிவாளிகள் அறிந்த உண்மையே.

நாம் மேலே குறிப்பிட்ட மூன்று பாகங்களில் கர்ப்ப ஸம்ரக்ஷணத்தைக் குறித்து முதலில் சிறிது விசாரிப்போம். நல்ல பலத்துடன் கூடிய குழந்தை பிறப்பதற்கு ஸ்திரீ புருஷர்கள் தகுதியானவர்களாக இருக்க வேண்டும். பெண் 16 வயதிற்கு மேற்பட்டும் ஆண் 25 வயதிற்கு மேற்பட்டும் இருக்க வேண்டும். இவர்களுக்கு சரீரத்தில் எந்தவித வியாதியும் இருக்கக் கூடாது. கடவுள் பக்தி, தேசாபிமானம், மதப்பற்று (அதாவது நம்மிலும் அதிக அறிவுள்ள மஹரிஷிகள் ஏற்படுத்தி இருக்கும் நல்ல வழிகளைப் பின் பற்றுதல்) ஒருவர்க்கொருவர் உண்மையான காதல், ஜீவகாருண்யம், ஸத்தியம், ஈகை, சுத்தம் இவைகள் இருப்பதுடன், விதிப்படி விவாகம் செய்துகொண்டு இல்லறத்தை (திருக்குறள் முதலியவற்றில் சொல்லப்பட்டிருக்கும் விதம்) தழுவி உலகவாழ்க்கையை நடத்துகிறவர்களாக இருக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட தம்பதிகளின் சரியான காலத்தில் ஏற்படும் சேர்க்கையால் உத்க்ருஷ்டமான கரு தரிக்கப்படுகின்றது.



மலட்டுத்தனத்தினால் இருபாலரும் கருத்தரிக்கத் தகுதியற்றவர்களாக இருக்கக்கூடும். சரியான காலத்தில் சரியான தம்பதிகளுக்கு புத்திரப்பேறு ஏற்படாவிடில், ஆண் பெண் யாராவது ஒருவருடைய அல்லது இருவருடையவும் மலட்டுத் தன்மையே காரணம் என்று அறியவேண்டும். அம்மலட்டுத் தன்மையை ஆயுர்வேத முறைப்படி செய்யப்படும் சரியான சிகித்ஸைகளால் நீக்கமுடியும். அதில் சுருக்கமான அனுபவமுறைகளை மட்டிலும் இங்கு எழுதுவோம்.

கர்ப்பாசயத்தை சுத்தப்படுத்தி கர்ப்பந்தரிக்கும்படி செய்ய கீழ்க்கண்ட மருந்து மிகவும் உபயோகமானது. தசமூலம் என்று சொல்லப்படும் பத்து மூலிகைகள், தாமரைக்கிழங்கு, கோஷ்டம், விளாமிச்சம் வேர், தகரை விதை, நாகணம், சிற்றாமணக்கு வேர் இவைகளை ஒரு வேளைக்கு வகைக்குக் கால்ரூபாய் எடை எடுத்து நன்றாகக் கொட்டி ஒரு சுத்தமான துணியில் கட்டி கால்படி பாலில் போட்டு ஷை பாலில் ஒருபடி ஜலம் கலந்து அந்த ஜலம் சுண்டும் வரையிலும் காய்ச்சி வடிக்கட்டி, ஷை பாலைச் சாப்பிட்டு வர கர்ப்பாசய தோஷங்கள் கிருமிகள் முதலியவை நீங்கும். ருதுகாலம் மூன்றுநாள் கழித்து நான்காவது நாள் காலையிலும் மாலையிலும் ஒரு தோலா சிறுநாகப் பூவைப் பொடி செய்து நெய்யில் குழைத்துச் சாப்பிட்டு, அன்றைக்கு உப்பு இல்லாமல் பால் அன்னம் மட்டும் உபயோகப்படுத்த கருத்தரிக்கும்.

புருஷர்கள் மலட்டுத்தனம் நீங்க அமுக்கிராக்கிழங்கை பாலில் உபயோகிக்கவும். இது மிகவும் சுருக்கமாயும் எல்லோரும் எளிதில் உபயோகப்படுத்தக் கூடியதும் அனுபவ சித்தமானதுமான முறை. ஆயுர்வேதத்தின் அஷ்டாங்கங்களில் ஓர் பாகமாகிய வாஜீகரணம் என்னும் முறை இவ்விஷயத்தையே முக்கியமாக உபதேசிக்கிறது. அம்முறைகளைத் தகுந்த வைத்தியர்கள் மூலம் உபயோகித்து நல்ல பலனை அடையலாம்.

தவிர, தற்காலம் கர்ப்பாசயம் திரும்புதல் (Womb Displacement) முதலிய சில கோளாறுகளுக்கு சஸ்திர

சிகித்ஸை முதலியது செய்யப்படுகிறது. இதில் சிறிது பலன் இருப்பதாக நமது முறைகளும் ஒத்துக்கொள்ளுகின்றன. ஆனால் இதில் அபாயங்களும், பிறகு வைத்தியத்தினால் மலட்டுத் தன்மை நீக்கமுடியாமல் போவதும் காணப்படுகிறது. கர்ப்பாசயத்திற்கு ஏற்படும் இந்தமாதிரிக் கோளாறுகள் சூதகவாயு என்று சொல்லப்படும் வாத நோயாகக் கருதப்படுகிறது. அதில் பல பேதங்களும் சொல்லப்பட்டிருந்த போதிலும் பொதுவாக அதைப் போக்கி கர்ப்பாசயத்தைச் சரிப்படுத்தக் கூடிய நல்ல எண்ணெய்கள், கிருதங்கள், பஞ்சகர்ம விதிகள் முதலிய முறைகள் அனுபவத்தில் நல்லபலனைத் தருகின்றன. இதை:பரம்பரையாகக் கையாண்டு வரும் வைத்தியர்களை அணுகி உபயோகித்துக் கொள்ளவேண்டும்.

புருஷர்களின் சுக்லம் அதிக பலமுடையதாக இருந்தால் ஆண் குழந்தையும், ஸ்திரீகளின் சோணிதம் என்னும் கருத்தரிக்கக் காரணமான ரஜஸ் அதிக வலிவுடையதாக இருந்தால் பெண் குழந்தையும், இரண்டும் சமபலமாக ஏற்பட்டால் அலியாகவும் பிறக்க நேரிடுகிறதாக நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஐரோப்பிய வைத்தியர் ஒருவர், “இஷ்டப்படி ஆண் பெண் குழந்தைகள் உண்டாக்க முடியும்” என்றஅபிப்பிராயத்தை உறுதியாகக் கூறுகிறார். அவர் கூறும் வழி நமது சாஸ்திரத்திற்கும் அனுபவத்திற்கும் முற்றிலும் சரி வருவதாகக் கூறமுடியவில்லை. கர்ப்பம் தரிப்பதற்கு முன்னாகவே ஸ்திரீகளுக்கு ஆகாரபோஷணையைக் குறைத்தால் அப்பொழுது பெண்குழந்தை பிறப்பதாகவும், புருஷர்களுக்குப் போஷணையைக் குறைத்தால் ஆண்குழந்தை பிறப்பதாகவும் அபிப்பிராயப் படுகிறார். ஆனால் நாம் முன் சொல்லியபடி, சுக்ல சோணிதங்களின் வலுவை அனுசரித்து இந்த மாறுதல்கள் உண்டாகாது. ஸ்திரீ புருஷர்களின் போஷணைக் குறைவினால் சுக்லசோணிதங்களின் வலிவு குறையுமே யல்லாமல் அதிகமாகாது. மிகுந்த போஷணை யுள்ள பெண்களுக்கு ஆண் குழந்தை தான் பிறப்பதாகக் காணோம். போஷணை யற்ற புருஷர்களுக்கும் பெண் குழந்தைகள் ஏராளமாகப் பிறந்துவிடு



கின்றன. ஆகையால் போஷணை குறைந்த ஆண் பெண்களுக்கு ஆண் பெண் குழந்தையே பிறப்பதாகக் கூறுவது ஒத்துக்கொள்ள முடியவில்லை.

ஆனால் கர்ப்பம் ஏற்பட்ட பிறகு சில மந்திரங்கள் மருந்துகளின் பிரயோகத்தால் பெண் கருவா இருந்தபோதிலும் ஆணாக மாற்றமுடியும் என்று சாஸ்திரத்தால் தெரிய வருகிறது. அதாவது ஆண் குழந்தை பிறப்பதற்கு பும்ஸவனம் என்று ஒரு சடங்கு வைத்தியத்திலும் வேதத்திலும் கூறப்பட்டிருக்கிறது. அந்த கர்மாவின் மஹிமையாலும் அதில் உபயோகப் படுத்தப்படும் மூலிகையின் சக்தியாலும் ஆண் குழந்தையாக மாறக்கூடும். அவ்விதிகளை வைத்தியர்களிடம் தெரிந்து கொள்ளவேண்டும்.

சரியான நிலையில் கர்ப்பம் ஏற்பட்டாலுங்கூட பலவித அழிவுகளுக்குட் படாமல் அதைக் காப்பாற்றவேண்டும். ஒவ்வொரு மாதமும் கர்ப்பிணி ஸ்திரீகள் நடந்துகொள்ள வேண்டிய விதிகள் பல உண்டு. அவைகளை எழுத மிகவும் விரியும். பொதுவாக பலாமூலம் என்று சொல்லப்படும் குறுந்தோட்டி வேரை கர்ப்பிணிகள் தினந்தோறும் ஒரு தோலா அளவு பாலில் காய்ச்சி உபயோகிக்க, கருவிற்கும் தாயாருக்கும் நல்ல போஷணையைச் செய்வதோடு சுகப் பிரஸவமும் ஏற்படும். குங்குமப்பூவை கர்ப்பிணிகள் தினமும் உபயோகித்து வருவது மிகவும் நல்லது. இதைப் பாலில் போட்டுகாய்ச்சியோ அல்லது குங்குமப்பூ சேர்ந்த லேஹிய ரூபமாகவோ உபயோகித்து வரலாம்.

கர்ப்பிணிகளுக்கு காற்று உருவங்களாகிய பூதபிசாசாதிகளின் பீடை ஏற்படும் என்றும், அதற்குத் தகுந்த ரக்ஷைகள் செய்யவேண்டும் என்றும் ஆயுர்வேதம் முதலிய இந்திய வைத்திய நூல்கள் கூறுகின்றன. இதை ஒரு சாரார் பரிகாசம் செய்தாலுங்கூட இதில் நம்பிக்கை வைப்பதினால் எவ்விதக் கெடுதலும் இல்லை என்பதை மேதாவிகள் ஒப்புக்கொள்ளவேண்டும். கடவுள் இல்லை என்று கூறும் நாஸ்திகனுக்கு உண்மையாகக் கடவுள் இருப்பாரேயானால் அவரால் தண்டனை கிடைப்பது நிச்சயம். ஆனால்

கடவுள் உண்டு என்று எண்ணி வழிபடும் ஆஸ்திகனுக்கு உண்மையில் கடவுள், மறுபிறப்பு முதலியது இல்லாமல் போனாலும் எவ்வித கெடுதியும் கிடையாது. அதைப் போல்தான் கண்ணுக்குத் தெரியாத உருவங்களாகிய பூதங்களைக் குறித்தும் தீர்மானிக்கவேண்டும். புண்ணிய பாபம் கலந்து மனிதர்கள் முதலான பிராணிகளின் உடல் பஞ்சபூதங்களால் ஏற்பட்டிருந்தபோதிலும், பிருதிவி என்னும் பூதம் முக்கியமானதால் கண்ணுக்கு நன்றாகப் புலப்படுகிறது. புண்ணிய உடலைக் கொண்ட தேவர்கள் தேஜஸ் என்னும் அக்னிபூதத்தைக் கொண்டவர்களானபடியால் ஜோதிரூபமாகவும், பாப உடல் கொண்ட பிசாசாதிகள் உருவமற்ற வாயு ரூபமாகவும் கருதப்படுகிறார்கள். ஆகையால்தான் தமிழர்கள் பேய் பிசாசு கோளாறுக்குக் காற்றுக் கோளாறு என்று உயர்ந்த பொருளுடன் கூறுகின்றனர். ஆகையால் இவைகளுக்கெல்லாம் வேண்டிய பரிகாரங்களுடன் கர்ப்பத்தைக் காப்பாற்றுவது தான் அறிவாளிகளின் கடமை.

சில கர்ப்பிணிகளுக்கு உடம்பு சோகை முதலிய வியாதிகளால் பீடிக்கப் பட்டிருந்தால் தகுந்த சிகித்ஸை செய்துகொள்ள வேண்டும். கர்ப்ப காலத்தில் செய்யப்படும் போஷணை தாயார் குழந்தை இருவருக்கும் உபயோகப்படும் என்பது நமது சாஸ்திரங்களின் கருத்து. ஆனால் ஆங்கில நூல்கள் தாயார் எவ்விதம் இருந்தபோதிலும் கர்ப்பத்தில் இருக்கும் கரு கொஞ்சங்கூட தாக்ஷிண்யம் இல்லாமல் தனக்கு வேண்டியதை முற்றிலும் எடுத்துக் கொள்ளுவதாகவும், ஆகையால் கர்ப்பகாலத்தில் போஷணைக் குறைவு ஏற்பட்டால் தாயின் உடல்தான் பாதிக்கப்படுமே தவிர குழந்தைக்கு எவ்விதக் குறையுமில்லை என்றும் கூறுகின்றன. இது எவ்விதம் இருந்தபோதிலும் கர்ப்பிணியை போஷிக்காமல் இருக்கமுடியாது.

சரியானபடி வளர்க்கப்பட்ட கர்ப்பம் பத்தாவது மாதத்தில் வெளிப்படும். சில கர்ப்பிணிகளுக்கு 6-வது, 7-வது மாதங்களில் பிரஸவ வலி போன்ற வலி ஏற்படும்.



இதற்கு பேய்ப்புடல் கஷாயம் போட்டு அதையே கல்கமாக அரைத்துக் கலக்கி எண்ணெய் (நல்லெண்ணெய்) அல்லது விளக்கெண்ணெய் வடித்து சாப்பிட நிவிருத்தியாகும். சிலருக்கு உடம்பில் வீக்கம் காணும். லஸீகா (लसीका) என்னும் ரக்தத்தின் சத்து (Albumen) நீரில் இறங்கும். இதற்கு தசமூலத்தைக் கொட்டி வெள்ளைத்துணியில் கிழிகட்டி, கஞ்சியில் போட்டு வேகவைத்து, அடி கஞ்சியை சாப்பிட நிவிருத்தியாகும். கண்டங்கத்திரி, முள்ளிக் கத்திரி, விளாமிச்சம், சிற்றாமுட்டி இவைகளின் வேரைக் கஷாயம் செய்து தேன் கலந்து சாப்பிடவும்.

பொதுவாக கர்ப்பத்தின் காலம் 280 நாட்கள் என்று சொல்லப்படுகிறது. ஸ்திரீகளின் மாதவிலக்குக்கு இருக்கும் நாட்களின் ஏற்றக் குறைவை அனுஸரித்து கர்ப்பகாலத்தில் சற்று மாறுதல் ஏற்படலாம். உதாரணமாக, 30 நாட்கள் கழித்து மாதவிடாய் ஏற்படுமானால் பிரஸவகாலம் 300 நாட்கள்; 25 நாட்களில் ஏற்படுமானால், பிரஸவ காலம் 250 நாட்கள். இரண்டிற்கும் நடுத்தரமாக 280 நாட்கள் குறிப்பிடப்பட்டது.

கர்ப்பிணியின் ஆகாரம் முதலியதுகளை நன்றாகக் கவனிக்கவேண்டும். கர்ப்பிணி ஒட்டியாணம் முதலிய நகைகளினால் வயிற்றை இறுக்கக் கூடாது. வஸ்திரத்தை மிகவும் தளர்த்தியே கட்டிக்கொள்ளவேண்டும். பொதுவாக கர்ப்பிணிகள் நல்ல வைத்தியர்களின் மேல்பார்வையில் அல்லது அனுபோகம் உள்ள பாட்டிமார்களின் உபதேசத்தில் இருந்து வருவது நல்லது.

வெள்ளரிக்காய் ரஸம் எடுத்து பாதி நெய் கலந்து, திரிபலை (கடுக்காய்த்தோல், நெல்லிக்காய்த்தோல், தானிக்காய்த்தோல்), கோஷ்டம், சிறுபூளை வேர், அதிமதுரம், மூங்கில் துளிர், சிற்றாமுட்டி வேர் இவைகளைக் கல்கமாகச் சேர்த்து நாலுபங்கு பால் கலந்து வடித்த நெய் சாப்பிட்டு வர சுகப்பிரஸவம் ஏற்படும்.

பிரஸவ விஷயம் இவ்வியாஸத்திற்கு அவசியமில்லாத விஷயமானபோதிலும் அதிக வைத்திய வசதி இல்லாதவர்

களைக் குறித்து பிரஸவ காலத்தில் ஏற்படும் கஷ்டங்களுக்கு நிவாரணமான சில சுருக்கமான அனுபவமுறைகளை இவ்விடம் குறிப்பிடுவது உசிதம் என்று எண்ணுகிறேன். பிரஸவ வலி ஏற்பட்டதும் திருபலை கஷாயத்தில் $\frac{1}{4}$ அவுன்ஸ் நெய்யும் ஜீரகப்பொடியும் சேர்த்து சாப்பிட சுகப்பிரஸவம் ஆகும். வலி ஏற்பட்டு நடுவில் நின்றுவிட்டால் கால்படி சூடான பாலில் ஒரு டீஸ்பூன் நெய்யும் ஒரு தோலா ஜீரகப்பொடியும் கலந்து சாப்பிட மறுபடியும் வலி உண்டாகி பிரஸவம் ஏற்படும்.

பிரஸவ கஷ்டங்களுக்கு புராணத்தில் ஓர் கதையும், அதை அனுசரித்து ஓர் மந்திரமும், அதற்கு ஒரு மருந்தும் கலந்து கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஹிமாலயத்தின் வடபாகத்தில் சபரீ என்று ஓர் யக்ஷிணி, உலகத்தில் ஸ்திரீகள் பிரஸவத்திற்காகப் படும் கஷ்டத்தைப் பொறுக்க முடியாமல் ஜீவகாருண்யத்தால் கடவுளைக் குறித்துக் கடுந்தவம் புரிந்து, அவரிடம் தன்னை நினைப்போருக்குப் பிரஸவ காலத்தில் கஷ்டம் ஏற்படக் கூடாது என்றும், தன்னை நினைத்தவுடன் தான் அவ்விடம் சென்று தன்னுடைய யோக சக்தியால் மருத்துவம் செய்து கஷ்டமில்லாமல் பிரஸவத்தை நடத்தி வைக்கும் திறமை தனக்கு வரவேண்டும் என்றும் வரம் பெற்று, மருத்துவ தேவதையாக விளங்குகிறாள் என்றும், ஆகையால் கீழே சொல்லப்படும் மருந்தைக் கொடுக்கும் பொழுது அவளை நினைக்கும் மந்திரத்தைக் கூட உச்சரித்துக் கொடுக்க சுகப்பிரஸவம் ஏற்படும். அறுகம்பில் மூன்று நுனிகளைக் கிள்ளி நல்லெண்ணெயில் போட்டு கறுப்பு நிறமில்லாத மூங்கில் வேரின் மேல் தோலையும் பொடி செய்து ஒரு எண்ணெயில் போட்டு,

हिमवत्युत्तरे पार्श्वे शबरी नाम यक्षिणी ।
तस्याः नूपुरशब्देन विशल्या भव गर्भिणि ॥

என்ற மந்திரத்தை ஜபித்து ஒரு கரண்டி எண்ணெயை உள்ளுக்குக் கொடுத்து அதில் போட்டிருந்த அருகம்பில்லை தலையில் சூடவும். ஆடாதோடையின் வடக்கு நோக்கிச் செல்லும் வேரை எடுத்து எண்ணெயில் அரைத்துச் சாப்



பிட உடனே குழந்தை வெளிவரும். காட்டுப் பன்றியின் பல்லை அரைத்துக் கண்ணுக்கு அஞ்சனம் போட சீக்கிரம் பிரஸவம் ஆகும். பிரஸவித்தவுடன் கண்ணை அலம்பி விடவும். அவ்விதம் அலம்பாவிடில் மருந்தின் பிரபாவத்தால் உள் உறுப்புக்கள் கூட வெளி வந்து விடலாம். பனிக்குடம் உடைந்தும் பிரஸவிக்காமல், இந்த சிகிச்சை செய்தும் பலன் கிடைக்காவிடில், வெண் நாபியும் நிலப்பனைக்கிழங்கும் நன்றாக அரைத்து, சதுரக்கள்ளிப் பாலும் வெண்ணெயும் சேர்த்து தாம்பிரப் பாத்திரத்தில் காய்ச்சி வடித்து எடுத்துக்கொண்ட நெய்யை மார்பு முதல் அடிவயிறு வரையிலும் கீழ்நோக்கித் தேய்க்கவேண்டும். சீக்கிரம் பிரஸவம் ஏற்படும். பிரஸவித்தவுடன் சுத்தம் செய்து விடவும். இந்த மாதிரி வைத்தியங்கள் ஆயுதப் பிரயோகம் போல் மிகவும் ஜாக்கிரதையாகவே செய்யப்பட வேண்டும். இதுவும் இனிமேல் சொல்லப்படும் முறைகளும் அதிக ஆபத்தில் தகுந்த வைத்திய வசதி கிடைக்காமல் போனால் மட்டுமே உபயோகிக்க வேண்டும். கரு நாவி, வெண் நாவி இவைகளை அரைத்து மார்பு முதல் கால் வரை கீழ் நோக்கித் தேய்க்கவும். இவைகளில் தகுந்த பலன் ஏற்படாவிடில் குழந்தை குறுக்கிட்டிருக்க வேண்டும். அல்லது உயிர் இழந்திருக்க வேண்டும். குழந்தை குறுக்கிட்டிருந்தால், கடுக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, அரைக்கீரை இவை போட்டுக் காய்ச்சின எண்ணெயை யோனியில் தடவ, யோனித் துவாரம் விசாலமாக விரியும். அந்த சமயம் இந்துப்பும், சுக்கும், காயமும் காடியில் அரைத்துக் கொடுக்க குழந்தை வெளிவரும். விச்சி இலையையும் (விருக்ஷி என்று தமிழிலும், தெச்சி என்று மலையாளத்திலும் சொல்லப்படும் ஊசி போல் காம்புடையதும், கொத்துக் கொத்தாகவும் வெள்ளையாகவும் சிவப்பாகவும் பூக்கக் கூடிய செடி)(வயிற்றில் மறித்துப் போன குழந்தை வெளி வர) இந்துப்பும், ஜாதிப் பூக்கொடியின் வேரும் காடியில் அரைத்து வயிற்றில் பூசி அனுலோமமாக (கீழ் நோக்கி)த் தேய்க்கவும். அதிமதுரம் அரைத்து சர்க்கரை கலந்து கொடுக்க வெளிவரும், யானை மலத்தில் முளைத்த நாய்க் குடை (இது மழை பெய்தால் முளைக்கும்

கானான் என்றும் சொல்லுவார்கள்)யை அரைத்து வயிற்றிலிருந்து கீழ் நோக்கித் தேய்க்கவும். துளசி ரஸமும் எண்ணெயும் கலந்து கொடுக்கவும். இவைகளில் எல்லாம் பலன் ஏற்படாவிடில் கள்ளிப்பாலை சிரஸில் 3, 9, 12 துளிகள் வரை விடவும். 12 க்கு மேல் விடக்கூடாது. இதிலும் பலிக்காவிடில் ஔஷத சிகித்ஸையில் அஸாத்யமேயாகும். இரட்டைக் குழந்தைகள் இருந்து ஒன்று வெளி வந்து மற்றொன்று வெளி வராமல் இருந்தால் மாந்துளிரை இடித்து ரஸம் பிழிந்து அரைக்கால் படிக்கு மேல் கொடுக்க வெளி வரும். புல்லுருவி (மரங்களின் கிளைகளில் செடிகள் போலும் கொடிகள் போலும் முளைக்கும்) ரஸத்தையும் கொடுக்கலாம்.

(தொடரும்)

## திருச்சி ஆயுர்வேத ஸபா.

19-7-1947 மாலை 4-மணிக்கு ஸ்ரீரங்கம் ஸ்ரீ. P. G. கணபதி சாஸ்திரிகளுடைய தலைமையில் நடந்த மாதாந்தரக் கூட்டத்தில் சென்னை மைலாப்பூர் வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலையின் தலைமை உபாத்தியாயர் ஆயுர்வேத பிரதிஷ்டாபகவர, வைத்திய விசாரத ப்ரம்ஹஸ்ரீ K. G. நடேச சாஸ்திரிகள் அவர்களுடைய அகால தேஹ வியோகத்தைக் குறித்து ஸபை மிகுந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, அன்னாரின் ஆத்ம சாந்திக்கு ஸ்ரீ தன்வந்திரிபகவானைப் பிரார்த்தனை செய்து, மேற்படியாரின் குடும்பத்திற்குத் தனது துயரத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதுமாகத் தீர்மானம் செய்யப்பட்டது.

பிறகு வைத்திய விசாரத ஸ்ரீ S. V, ராதாகிருஷ்ண சாஸ்திரிகளால் ஆயுர்வேதத்தில் 'மான பரிபாஷா' என்ற விஷயத்தைப்பற்றி விஸ்தாரமாக உபந்யாஸம் செய்யப்பட்டது.

— V. R. ஸுப்ரமணிய அய்யர்,
காரியதரிசி.



# மந்திரியின் மனப்போக்கு?

ஸ்ரீமான் ஓமாந்தூர் ரெட்டியாரவர்களின் மந்திரிசபை ஏற்பட்ட பிறகு அந்தந்த இலாகா மந்திரிகள் தங்கள் தங்கள் இலாகா ஸம்பந்தமான விஷயங்களில் தாங்கள் செய்ய உத்தேசித்திருக்கும் புதிய கார்யங்களை ஜனங்களிடையே சமயங்களில் தெரிவித்துக்கொண்டும், செய்துகொண்டு மிருக்கின்றதானது வெளிப்படையாகத் தெரிகின்றது. தொழில் இலாகா மந்திரி Dr. T. S. S. ராஜன் அவர்கள் தனது இலாகாக் கார்யம் மட்டுமின்றி ஆயுர்வேத ஒழிப்பு முதலிய இதர கார்யங்களையும் சேர்த்து செய்து கொண்டிருக்கிறார். ஆரோக்கிய இலாகா மந்திரி ஸ்ரீ. ஷெட்டி அவர்கள் ஆங்கில வைத்திய இலாகாவில் இருக்கும் பெரிய அதிகாரிகளையும் மற்றும் சில பொது மனிதரையும் சேர்த்து மேனாட்டு முறைப்படி பொது ஜன ஆரோக்கியம் வைத்திய மிவைகளுடைய அபிவிருத்தி மார்க்கத்தைப் பரிசீலனை செய்ய ஒரு சிறிய கூட்டம் சென்றமாதத்தில் கூட்டுவித்தார். ஆயுர்வேத வைத்திய விஷயமாய் கனம் மந்திரியார் என்னென்ன கார்யம் செய்ய உத்தேசித்திருக்கிறார்? ஆயுர்வேத விஷயத்தில் மந்திரியின் மனப்போக்கு எவ்விதமிருக்கிறது? என்று அறிந்து கொள்ளக்கூடிய பேச்சோ, எழுத்தோ இதுவரை ஒன்றும் விசேஷமாய் பகிரங்கமாகத் தெரியவில்லை.

ஆனால், பழைய பிரகாசம் மந்திரிசபையினால் ஆயுர்வேத விஷயமாய் என்னென்ன கார்யங்கள் செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்தனவோ அவைகள் எல்லாவற்றையும் முதலில் முற்றிலும் மாற்றிவிட அந்தரங்கத்தில் முனைந்திருக்கிறதாகத் தெரிகிறது.

பிரகாசம் மந்திரி சபையில்— தேசிய வைத்தியர்களின் உதவியைக் கொண்டு கிராமவைத்தியத் திட்டம் உடனே அநுஷ்டானத்தில் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தேசிய வைத்தியர்களுடைய ரிஜிஸ்டரில் இருந்த A. B. வகுப்புப் பிரிவு ரத்து செய்யப்பட்டு விட்டது. ஒரே ரிஜிஸ்டரைப் புதுப்பிக்கவும் ஏற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன. கவர்ன்மெண்டு இந்தியன் மெடிகல் ஸ்கூலை நிறுத்திவிட்டு மேற்படி காலேஜ் ஒன்று ஸ்தா

பிக்கப் பட்டுள்ளது. கனம் ஷெட்டி அவர்கள் இந்த மேற் கூறிய மூன்று விஷயங்களையும் முதலில் மாற்றிவிட இப்போது ஆலோசனை செய்துகொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. அதாவது, கிராம வைத்தியத் திட்டத்தில் தேசிய வைத்தியர்களைச் சேர்த்துக் கொள்ளுவதை அகற்றி விடுவது, ரிஜிஸ்டரில் எடுக்கப்பட்டுப் போன A. B. வகுப்புப் பிரிவினையைத் திருப்பிக் கொண்டு வருவது கவர்ண்மெண்டு இந்திய மெடிகல்ஸ்கூலை நிறுத்தி விடாமல் நடத்தல் இவைகளாம். புதிதாக இந்தியன் மெடிகல் காலேஜ் ஆரம்பித்தல் என்பதே ஸ்கூல் என்ற போர்டு முதலியவைகளை மாற்றி காலேஜ் என்று போர்டு புதிப்பித்தலைக் காட்டிலும் வேறுவித அபிவிருத்தி சர்க்கார் செய்ய முன் வரமாட்டார் என்று ஏற்கனவே பொது மக்கள் அபிப்பிராயம் கொண்டிருந்தனர்.

பெயரளவில் கூட உயர்வில்லாமல் இப்போது ஸ்கூலும் ஸ்கூலாகவே நடந்து கொண்டிருக்கும் உத்தேசமிருப்பின் ஒரு சமயம் புதிதான இந்தியன் மெடிகல் காலேஜும் எடுபட்டுப் போய் விடுமோவென்று சந்தேஹிக்கின்றனர். ரிஜிஸ்டரில் A. B. வகுப்புப் பிரிவினை செய்தது தவறுதல் என்று அநுபவித்துத் தெரிந்தே பிரிவினை அகற்றப்பட்டது. இப்போது பிரிவினையைத் திருப்பிக் கொண்டுவர என்ன அவசிய காரணம் ஏற்பட்டதோ? பழைய மந்திரியால் ஏற்பாடு செய்யப்பட்டதென்ற ஒரு காரணமே போதுமானதா யிருக்கலாம்.

---

## நல் வரவு:

சென்னையில் Journal of Indian Medicine என்ற பெயரில் நடந்துகொண்டிருந்த இங்கிலீஷ் மூன்று மாதப் பத்திரிகை சுமார் 8 வருஷங்களாகப் பிரசுரிக்கப்படாமல் நின்று போயிருந்ததானது சென்ற ஜூன் மாதத்தில் திரும்பவும் பிரசுரிக்கத் தொடங்கி யிருக்கிறதை யறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இந்த முதல் சஞ்சிகையில் பல வைத்திய வித்வான்களால் வரையப்பட்ட அழகிய கட்டுரைகள் பிரகாசிக்கின்றன. ஆயுர்வேதத்தின் பிரசாரத்திற்குப் பரம சாதனம் பத்திரிகைகள். ஸமான லக்ஷ்யமுள்ள இப்பத்திரிகை புனருஜ்ஜீவித்து வந்ததிற்கு மிகச் சந்தோஷத்துடன் நல்வரவு கூறுகிறோம்.

---

188819



சுத்தாயுர்வேத ப்ரதிஷ்டாபக, வைத்ய விசாரத,

ப்ரஹ்மஸ்ரீ. K. G. நடேச சாஸ்த்ரிகள்.

மைலாப்பூர் வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலையின் பிரதான ஆசார்யர்.

மூன்றாவது திராவிட வைத்திய ஸம்மேளனத் தலைவர்.

பிறப்பு கி. பி. 1886. பிரிவு 1947.

61-வருஷங்கள்.

# ப்ரம்ஹஸ்ரீ K. G. நடேச சாஸ்த்ரிகளுடைய

## மறைவு.

அந்தோ! ஆயுர்வேத சாஸ்திரம் அகதியாய்விட்டது!

சென்ற 9-7-47-ல் பிரம்ஹஸ்ரீ K. G. நடேச சாஸ்திரிகள் அவர்கள் பூத உடலை நீற்று பிரும்ஹ ஸாயுஜ்ய மடைந்தார் என்ற இடி விழ்ச்சியால் ஆயுர்வேத பண்டித லோகம் முற்றிலும் தாங்கமுடியாத அதிர்ச்சியுற்று தபிக்கிறது.

ஆகா! சாஸ்திரிகளுக்கு ஆயுர்வேதத்தில் எவ்வளவு உத்தம பக்தி! ஆராய்ச்சித் திறமை! பரிநிஷ்டிதமான ஞானம்! சிஷ்ய போதனா சக்தி! சிஷ்ய வாத்ஸல்யம்! தத்துவப்பிரகாசத்தில் ஆர்வம்! கிரந்த நிர்மாண யோக்யதை! ஆயுர்வேத பரிசுத்தி பரிபாலனத்தில் சிரத்தை! ஆயுர்வேத தூஷணையில் அடங்காத கோபம்! அதிகமென்ன, படிப்பு, அறிவு, அநுஷ்டானம், போதித்தல், பிரசாரம் செய்தல் (अधीतिबोधाचरणप्रचारणानि) ஆகிய கார்யங்களினால் ஆயுர்வேதத்திற்கு ஆத்ம ஸர்ஸ்வார்ப்பணம் செய்துள்ள மஹான். இவ்விதம் ஆயுர்வேதத்திற்குப் பரமாசிரளமான ஒரு வியக்தி புவியில் வேறு எங்குள்ளது? ஸ்ரீ நடேச சாஸ்திரிகளுடைய அகால மரணத்தினால் சுத்தாயுர்வேத சாஸ்திரம் அகதியாய் விட்டது என்பதில் ஸந்தேஹ லேசமில்லை.

### சரித்திரச் சுருக்கம்.

ஸ்ரீ நடேச சாஸ்திரிகள்— பாண்டிய தேசத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரபர்ணீ நதி தீரத்தில் கடயம் என்ற பிராம்மண அக்கிரகாரத்தில் கி. பி. 1886-ம் ஆண்டில் ஜனித்தார். தந்தையின் பெயர் ஸ்ரீ குருஸ்வாமி சாஸ்திரிகள். தாயின் பெயர் ஸ்ரீ அம்மாளு அம்மாள். இவர்களுடைய இரண்டாவது குமாரர் நமது சாஸ்திரிகள். சாஸ்திரிகளுக்கு ஸ்ரீ ஸுப்பிரமணிய சர்மா, ஸ்ரீ ஸுந்திரம் அய்யர் என்று பெயருள்ள இரு அநுஜர்களும், ஸ்ரீகல்யாணீ அம்மாள் என்ற ஒரு ஸகோதரியும் உண்டு.

சரியானபடி ஏற்பட்டிருந்தால் அளவற்ற பலன்களைப் பெற்றிருக்குமென்று சொல்லாமலிருக்க முடியவில்லை.

ஸ்ரீ சாஸ்திரிகள் மஹா ஆசார சீலர். "धर्मशास्त्रपरं विद्यात् नरं नित्यरसायनम्" என்ற சரகோபதேசப் படி க்ருஹஸ்தனுக்குரிய ஷட்கர்மாக்களை நித்யம் சிறிதும் லோபமின்றி அனுஷ்டித்துக்கொண்டே யிருந்தார். சிவ பூஜையில் பரம ப்ரியமுள்ளவர். ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்களுடைய ப்ரீதிக்குப் பாத்திரமானவர்களில் ஒரு முக்கியஸ்தர்.

ஆசாரம்.

ஆயுர்வேதத்தில் மாணுக்கராயிருக்கும் போதே ஸம்ஸ்க்ருத பாஷையில் பரிணயமீமாம்ஸா என்ற க்ரந்தம் முதன் முதலில் ஸ்ரீ சாஸ்த்ரிகளால் இயற்றி ப்ரகாசம் செய்யப் பட்டது. ப்ராம்ஹண கன்னிகைகளுடைய விவாஹஸம்ஸ்காரம் செய்யவேண்டிய காலத்தை தர்ம சாஸ்திரப்படி நிர்ணயிக்கும் கிரந்தமிது. வெங்கடரமண கலாசாலையின் தர்மாதிகாரிப் பிரபுக்கள் அன்னுளில் பிரௌடா விவாஹம் சாஸ்திரீயமென்ற கொள்கையைப் பிரசாரம் செய்து கொண்டிருந்தபொழுது அக்கலாசாலையில் உபகாரம் பெற்றுக் கொண்டு பயிலும் மாணுக்கர் இவர் பிரௌடா விவாஹம் பிராம்மண கன்னிகைகளுக்கு அசாஸ்திரீயம் என்று புஸ்தகம் வெளியிட்டதிலிருந்து நடேச சாஸ்திரிகளுக்கு தர்ம சாஸ்திரத்தில் இருந்த பக்திசிரத்தை, தர்மசாஸ்திரத்திலும், மீமாம்ஸா சாஸ்திரத்திலும் ஞானம், சுதந்திர மனோபாவங்கள் எல்லாம் ஸ்பஷ்டமாயின.

க்ரந்த நிர்மாணம்

त्रिदोषमीमांसा— என்ற பெயரில் நிகில பாரத ஆயுர்வேத மஹா ஸம்மேளனத்தில் கட்டுரைப்போட்டிக்கு ஸம்ஸ்க்ருதத்தில் எழுதிய நீண்டதொரு நிபந்தம். அத்யுத்தமமென்று இதற்குத் தங்கப் பதக்கம் வித்வான்களால் ஸன்மானம் அளிக்கப்பட்டது.

जीवाणुवाद:— மஹாமஹோபாத்யாய கவிராஜ கணநாதஸேன ஸரஸ்வதியின் ஒரு உபந்யாஸத்தில் வெளிவந்திருந்த ஜீவாணுகாரண வாதத்தின் ஒரு அம்சத்தைப் பார்த்து உடனே ஆயுர்வேத ஸித்தாந்தப்படிக்கு ஜீவாணுக்களுக்கு பிரதான காரணத்துவம் கிடையாது என்று ஸதாபித்து சிறிய கிரந்தமொன்று அச்சிட்டுப் பிரகாசம் செய்தார்.



कल्याणवार्तिकम्– ம-ம-கவிராஜ கணநாத ஸேனருடைய ஸித்தாந்த நிதானத்தின் முதல்பாகம் கி. பி. 1922-ல் வெளிவந்ததும் அதிலுள்ள சில தோஷங்களைப் போக்கும் கருணையுடன் கல்யாணி யென்னும் பிரிய சகோதரியின் பெயர் வைத்து மிகப்பெரிய கிரந்தம் செய்தார். இது ஸித்தாந்த நிதானத்திற்கு வியாக்கியான ரூபமாயிருப்பினும் ஆயுர்வேத ஸர்வஸ்வ போதகமான அத்யுத்தம சாஸ்திர விசாரக் கிரந்தமாகும். ஸித்தாந்த நிதானத்திற்கு வியாக்கியானம் என்று பெயர் வைக்காமல் ஒரு ஸ்வதந்திரக் கிரந்தமாகவே செய்திருந்தால் இன்னம் தரம் என்று பல நண்பர்கள் சாஸ்திரிகளிடம் சொல்வதுண்டு. ஏனெனில், மூலக் கிரந்தகர்த்தாவான கணநாதஸேனருடைய அபிப்பிராயங்கள் எல்லாவற்றையும் தந்திரயுக்தி பலத்தினுல் முற்றிலும் அபஸித்தாந்தமென்று சாஸ்திரிகள் வியாக்கியானத்தில் கண்டித்து விட்டார். கல்யாண வார்த்திகத்தின் முதல் பாகத்தில் இப்போது கிடைக்கும் சரக ஸூத்ரங்கள் பிரதிஸம்ஸ்கர்த்தாவினுல் தூஷிக்கப் படவில்லை யென்று மீமாம்ஸா நியாயப்படி ஸித்தாந்தம் செய்து; விரோத பரிகாரம் தந்திர யுக்தியினுல் செய்துள்ளார். இரண்டாவது பாகத்தில் ஆயுர்வேதத்தின் மூலதத்துவ ஸ்வரூப விக்ஞானமும், ஆயுர்வேத ஸம்ஹிதைகளின் சரித்திர ஆராய்ச்சியும், அதை ஒட்டி பாரத தேசத்தின் யதார்த்தமான சரித்திரமும் விஸ்தாரமாய் கூறப்பட்டுள்ளது. மூன்றுவது பாகத்தில் ஆலோபாதிக் சாஸ்திரத்தில் சொல்லப் பட்ட ஜீவாணுவாதம்(Bacteriology)serum and vaccine Theropies எல்லாம் ஆராய்ச்சி செய்யப்பட்டு இவைகள் ஆயுர்வேதப் படிக்கு அபஸித்தாந்தங்கள் என ஸாதிக்கப் பட்டுள்ளன. வெளிநாட்டாரின் Bacteriology சாஸ்திரம் அதன் ஸம்பந்த விஷயங்கள் யாவும் இதில் கூறி பிரதி

ரோகத்திலும் ஸமந்வயம் செய்து காட்டப்பட்டிருக்கிறது. இம் மூன்று பாகங்களில் முதலாவது பாகம் மட்டுமே கி. பி. 1932-ல் அச்சிட்டு வெளியாகி யிருக்கிறது.

**मधुकोशमकरन्दम्**— கணநாத ஸேனர் ஸித்தாந்த நிதான பஞ்சலக்ஷணியில் மாதவநிதான மதுகோச வியாக்கியாதா விஜயரக்ஷிதருடைய சில பக்ஷங்களைக் கண்டனம் செய்தது தவறுதல் என்று ஸமர்த்தனம் செய்து, இன்னம் அநேக அபூர்வ விஷயங்களை விஸ்தாரம் செய்து, மாதவநிதானத்தின் மதுகோச வியாக்கியானத்திற்கு மகரந்தம் என்ற வெகு அழகிய வியாக்கியானம் பஞ்சலக்ஷணீ முடிய எழுதி யிருக்கிறார். இதில் சாஸ்திரிகளுடைய நியாயசாஸ்திர நிபுணத்துவம் பிரகாசிக்கிறது. ஸுச்ருத ஸம்ஹிதையின் ஸூத்ரஸ்தானத்திற்கு ஜஜ்ஜடாசார்ய வியாக்கியானம், சாரீர ஸ்தானத்திற்கு கயாதாஸாசார்ய வியாக்கியானம், சரகஸம்ஹிதை ஸூத்ரஸ்தானம் முதல் மூன்று அத்தியாயங்களுக்கு பட்டார ஹரிச்சந்திராசார்ய வியாக்கியானம் குமாரஸ்வாமி கிருத பஞ்சிகா வியாக்கியானம் இவைகளை இந்தியாவிலும், இங்கிலாந்திலுமுள்ள பழயக் கிரந்தாகாரங்களிலிருந்து மிக சிரமப்பட்டு சேகரித்து, இந்த வியாக்கியானக் கிரந்தங்களுக்கு விசேஷார்த்தபுஷ்டியுடன் தன்னுடைய வியாக்கியானங்களை தனித் தனியாக எழுதியுள்ளார். மேற்கூறியவைகளெல்லாம் அழகிய எளிய ஸம்ஸ்கிருத நடையில் எழுதப்பட்டவை.

ஸ்ரீமான் சாஸ்திரிகள் ஆங்கிலபாஷையிலும் பெரிய எழுத்தாளர். ஸ்ரீரங்கம் வாணீவிலாஸம் பிரசுராலயத்திலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த 'Hindu Message' என்ற இங்கிலீஷ் பத்திரிகையில் Hindu calture முதலிய விஷயங்களைப் பற்றி சிறு பிராயத்திலிருந்தே அநவரதம் எழுதி வெளியிட்டுக் கொண்டிருந்தார். இதனால் Royal Asiatic Societyயில் Member ஆக எடுத்துக் கொள்ளப்பட்டார். முக்கியமாய் ஆயுர்வேதப் பிரசாரத்தைக் கருதியே கல்பத்ருமம், ஜிஜ்ஞாஸா என்ற பெயர்களில் ஸம்ஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் இரண்டு மாஸிகைப் பத்திரிகைகள் சிலகாலம் சொந்தமாகவே நடத்திவந்தார். இவை



கள் அச்சிட ஒரு சிறிய அச்சுக்கூடமும் வீட்டிலேயே வைத்துக் கொண்டிருந்தார். காமகோடி பீடாசார்யாளுக்கு எழுதிய அனந்தசயனம் அரசர்களுடைய லிகிதங்கள் என்றக் கிரந்தத்தை ஆங்கிலத்தில் பிரசுரம் செய்துள்ளார். Land Marks in the History of Hindu India, என்ற கிரந்தம், Review of :Kasyapa Samhita முதலிய பல பல கிரந்தங்கள் சிறிதும் பெரிதும் செய்துள்ளார். சாஸ்திரிகளின் எழுத்துக்களில் அச்சிட்டவை சில. அச்சிடாதவைகளே பல. ஸம்ஸ்கிருதத்திலாகட்டும், இங்கிலீஷிலாகட்டும், சாஸ்திரிகளுடைய பேனா வெகு வேகத்தில் பக்கம் பக்கமாய் எழுதித் தள்ளிவிடும். பிறகு இரண்டாவது கவனத்தில் அடித்தல் திருத்தல் மாற்றல்களுக்கு அவசியம் அவரெழுத்தில் அநேகமாய் ஏற்படுவதில்லை.

**ஆயுர்வேதப் பிரசார ஸேவை.**

வெங்கடரமண கலாசாலை அலுவல்களுடன் ஆயுர் வேதப் பிரசார கார்யத்தில் ஸ்ரீ சாஸ்திரிகள் ஈடுபட்டு செய்து முடித்துள்ள கார்யங்கள் வெகு அதிகமானவை. நிகிலபாரத ஆயுர்வேத மஹாமண்டலத்திற்கு உதவி கார்யதர்சியாக இருந்தார். அதன் சாகையாகத் திராவிட வைத்திய மண்டலத்தை ஸ்தாபித்தார். சென்னை ஆயுர்வேத சபாவைப் புதுப்பித்தார். இந்த இரண்டு ஸ்தாபனங்கள் மூலம் தென்னிந்தியாவில் ஆயுர்வேதப் பிரசாரத்தை பலமாய் நடத்தினார். திராவிட வைத்திய மண்டலத்தின் 3-வது மகாநாட்டில் தலைமை வஹித்தார். இவர் ஆரம்பித்து அபிவிருத்தி செய்த திராவிட வைத்திய மண்டலமேதான் இப்பொழுது தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலமென்று பெயருடன் விளங்குகிறது.

ஆயுர்வேதப் பிரசார கார்யத்திற்காக குடும்பத்தில் சகல ஸௌகர்யங்களையும் குறைத்துக்கொண்டு கைப் பணம் முற்றிலும் செலவு செய்துகொண்டிருந்தார். பொருள் சம்பாதிக்கும் திறமை பெற்றிருந்தும் அதற்கு அவகாசமின்றி சகோதரர் ஸ்ரீ சுப்பிரமணிய சர்மா அவர்களும் தமயனுருடைய ஆயுர்வேத சேவா கார்யத்திலேயே ஆயுட்காலம் பூராவும் ஈடுபட்டே ஆயுர்வேதம் ஆயுர்வேதம் என்றே உயிர் நீத்தார். ஸ்ரீராமரிடம் பரதன்

போன்று இவர் தம்யனாரிடமிருந்தார் என்று சொன்னால் மிகையாகாது.

கி. பி. 1920-ல் சென்னை கவர்ன்மெண்டினால் இந்திய வைத்திய மருந்துகளின் பிரயோஜனத்தை ஆராய்ந்து சொல்லுவதற்காக நியமிக்கப்பட்ட Dr. M. C. கோமான் அவர்கள் இந்திய வைத்திய மருந்துகள் விசேஷப் பிரயோஜனமுற்றவை யல்ல என்று வெளியிட்ட யாதாஸ்திற்கு உடனே 1921-ல் ஒரு மறுப்புப் புத்தகம் பெரிதாக எழுதி வெளியிட்டார். இப்புத்தகம் ஒரு சாதாரண மறுப்பு மட்டுமாகாது. பிரதி வைத்திய வித்வானும் கற்கவேண்டிய சட்ட புத்தகமாகும். இதனாலேயே Dr. கோமான் யாதாஸ்து அடிபட்டு விட்டது. சர்க்கார் ஆயுர்வேதாபிவிருத்தியைச் சொல்ல Sir உஸ்மான் தலைமையில் Dr. G. ஸ்ரீநிவாஸ மூர்த்திக் கார்யதர்சித்தனத்தில் புதிய கமிட்டியை கி.பி. 1924-ல் திரும்ப நிறுவிற்று. இக்கமிட்டியில் நமது சாஸ்திரிகளும் ஒரு மெம்பர். மற்ற எல்லா அங்கத்தினர்களும் கொடுத்த அபிப்பிராயத்திற்கு சாஸ்திரிகள் சம்மதியாமல் தனி அபிப்பிராயம் கொடுத்தார். The minute dissent of Ayurveda என்ற பெயரில் ஒரு சிறிய புத்தக மெழுதி வெளியிட்டுள்ளார். அதில்— இப்போது நடக்கும் மாதிரியில் இந்திய வைத்தியப் பள்ளிக்கூடம் வைப்பதினால் காலாந்தரத்தில் ஆயுர்வேதத்திற்கு எவ்வித அழிவு ஏற்படுமென்றும், தேசீய வைத்தியர்களுக்குள் எவ்வளவு பிளவுகளும் சச்சரவுகளும் ஏற்படுமென்றும் காரணத்துடன் இது போன்ற பள்ளிக்கூடம் வைக்கக் கூடாதென்றுத் தீவிரமாய் கண்டித்து, எது போன்ற பள்ளிக்கூடம் நடத்தப்பட வேண்டுமென்றும் விளக்கிக் காட்டியுள்ளார். எத்தனைவித தோஷங்கள் ஏற்படலாமென்று 1922-ல் சாஸ்திரிகள் ஊகித்துச் சொன்னாரோ, அவைகளுக்குப் பன்மடங்கதிகமாகவே 1947-க்குள் ஆயுர்வேதத்திற்கு ஹானி தத்துவ திருஷ்டியில் ஏற்பட்டு விட்டது.

ஸ்ரீமான் சாஸ்திரிகள் சுத்தாயுர்வேதத்தின் தீவ்ர பக்தோத்தமரானதால் இதுபோல் சுத்தாயுர்வேதாபிவிருத்



திப் பிரதிபந்தகமான பள்ளிக்கூடம் ஏற்படுத்துவது கூடாது என்று எழுதியதுடன் வாளாவிருக்கவில்லை. மேடைகள் மூலமும் பலமாக எதிர் பிரசாரம் செய்தார். ஆனால் ஆயுர்வேதத்தின் துரதிருஷ்டம், சாஸ்திரிகளின் தத்துவோபதேசம் ஜயிக்கவில்லை. அதுமுதல் கொண்டே சாஸ்திரிகள் ஆயுர்வேத வெளிப் பிரசார கார்யத்திலிருந்து பூர்ணமாய் விலகி விட்டார் என்று சொல்லலாம்.

ஸ்ரீ சாஸ்திரிகள் ஆயுர்வேதாபிவிருத்திக்காக எதை எங்கிருந்து ஸ்வீகாரம் செய்துகொண்ட போதிலும் ஆயுர்வேத ஸித்தாந்தப் படிக்கு முற்றிலும் பரீக்ஷை செய்தே சேர்த்து அபிவிருத்தி ஏற்படவேண்டுமே தவிர அப்படியே மேல்நாட்டு வைத்தியத்தைக் கலந்து கொள்வதில் கெடுதல் விளையுமே தவிர, சிறிதும் உண்மையில் பிரயோஜனமேற்படமுடியாது என்ற கொள்கை திருடமாயுள்ளவர் என்பது யாவரு மறிந்தது. அன்னாரின் மனோபீஷ்டப்படி ஆயுர்வேத சாஸ்திராபிவிருத்தி செய்ய தேவையான சௌகர்யங்கள் அவருக்குக் கிடைக்காமற்போனது ஆயுர்வேத உலகிற்குப் பெரும் தௌர்ப்பாக்கியமே யாகும். ஒரு சமயம் அவர் கோரியபடி சாதனங்கள் கிடைப்பினும் அப்பேர்ப்பட்ட வித்வான் கிடைப்பது அரிதானதால் பூர்ண பயனளிக்குமா என்று சந்தேஹந்தான்.

ஸ்ரீ நடேச சாஸ்திரிகளின் பஞ்சமஹாபூத சரீரம் மறைந்து போயிற்றே தவிர அன்னாரின் அருமையான ஆராய்ச்சிகள் இன்னும் மறையவில்லை.

**நமது கடமை.** அவைகள் கிரந்தாரூடமா யிருக்கின்றன. அவைகளும் அழிந்துவிடாமல் செய்ய வேண்டிய கடமையை ஆயுர்வேதாபிமானி ஒவ்வொருவரும் காப்பாற்றவேண்டும். அதிலும் விசேஷமாக சாஸ்திரிகளுக்கு சுமார் 35 வருஷகாலம் வித்யாதானம் செய்து வைக்க சௌகர்யமளித்துக் கொண்டிருந்த வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலைக்கும் சாஸ்திரிகளிடம் வித்யாப்பியாஸம் செய்த சகல வைத்தியர்களுக்கும் முக்கியக் கடமையாகு மிது என்று சொல்லத் தேவையில்லை. ஸ்ரீ சாஸ்திரிகளால் ஸம்ஸ்க்ருதம், தமிழ், இங்கிலீஷ் பாஷை

களில் எழுதி வைக்கப்பட்டிருக்கும், சிறிய பெரிய எல்லாக் கிரந்தங்களையும் அச்சிட்டுப் பிரகாசம் செய்வதன் மூலம் ஆயுர்வேத சாஸ்திரத்திற்கு அளவிலாப் பிரயோஜனமேற்படுமென்பதில் ஐயமில்லை. இந்த மேலான காரியத்தைச் செய்து முடித்தால் வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலை அதிகாரிகள் தன்னுடைய கலாசாலை வித்வானின் பெருமையை சாஸ்திர உலகில் சாசுவதமாக விளங்கச் செய்தவராவார்கள். சாஸ்திரிகளின் சிஷ்ய வைத்தியர்கள் குரு பக்தியை விசேஷமாய் அநுஷ்டித்தவராவார்கள். தமிழ் நாடு ஆயுர்வேத மஹா மண்டல அங்கத்தினர்களும் தமது மண்டலத்தின் பிரதம ப்ரதிஷ்டாபகருக்கு சரியான முறையில் நன்றி செலுத்தியவராவார்கள். ஆகவே எல்லோரும் இந்தக் காரியத்திற்கு முன் வரவேண்டும்.

தம்பி ஸௌந்தரமய்யருக்கு, குடும்பத்தின் தலைமைப் போஷகரான தமயனாரின் வியோகத்தினால் ஏற்படக்கூடிய துயரத்தைத் தெரிவிக்கவோ, தேற்றவோ வார்த்தையே கிடையாது. சாஸ்திரியாரின் குடும்ப நிலையறிந்த வெளி ஜனங்களுக்கே துக்கம் தாங்கமுடியவில்லை. ஸௌந்தரமய்யருடைய குடும்பத்திற்குக் கஷ்டங்கள் இந்த வஜ்ராகாதத்துடன் முடிந்து இனி க்ஷேமாதிசயங்கள் ஏற்பட பகவான் கருணைபுரியப் பிரார்த்திக்கிறோம்.

## விசேஷ அறிவிப்பு.

சிலர் தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் 1946-வருஷத்திய சந்தாவை நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் செலுத்தினர். சந்திரிகை இவர்களுக்கு 1946-ல் 12 சஞ்சிகைகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன. 1947 மண்டல சந்தாவை கேழ்க்கும்போது தாங்கள் சந்தா கொடுத்து ஒரு வருஷமாகவில்லையே என்று ஸந்தேஹிக்கின்றனர். முன்பு கொடுத்தது 46-வருஷத்திற்கு. இப்போது கேழ்ப்பது 1947-வருஷத்திற்கு என்று தெரிவிக்கிறோம். மேலும், இனி ப்ரதி வருஷம் ஜனவரி முதல்வாரத்திற்குள் வருஷச் சந்தாவை அவசியம் அட்வான்ஸாக செலுத்தவேண்டுகிறோம். மண்டலத்திற்கும் சந்த்ரிகைக்கும் வருஷாரம்பம் ஜனவரி மாதம். வருஷ மத்தியில் சேருவோருக்கும் ஜனவரிமுதல் கணக்குவைத்து வருஷாரம்பத்திலிருந்து பத்திரிகைகளும் அனுப்பிக்கப்படும். — A. ராகவராவ், உபகார்யதர்சி.

# :: ஸமயோசிதம் ::

[ப. P. S. ராமசர்மா, கரூர்.]

## ஸமயோசிதம் அதர்மத்திற்குக் காரணம்.

இரு சாரார்களைத் திருப்தி செய்யவேண்டி வந்தாலும் தர்மமே முக்கியமாக இருந்தால் பொறுப்பில்லாத நிலைமை ஏற்படாது. பொறுப்பை தர்மத்தினிடம் ஒப்புவித்து விடலாம். அப்படிக்கில்லாமற் போகும்பொழுது தான் சமயோசிதம் போல் நடக்க நேருகின்றது. இந்த சமயோசிதந்தான் அதர்மத்தை வளர்க்கின்றது.

சென்னையில் நமது உணவு மந்திரி டாக்டர் ராஜன் அவர்கள் ஸ்ரீநிவாஸ க்ளினிக் என்ற பெயருடன் ஒருவருக்குச் சொந்தமானதும், வியாதியைக் கண்டு பிடிக்கும் உபயோகத்தை முக்கியமாகக் கருதி ஏற்படுத்தப்பட்டதுமான மேனாட்டு முறையைத் தழுவிய வைத்தியசாலையைத் திறந்து வைத்த பொழுது பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார். நமது டாக்டர் தன் மனதில் ஆயுர்வேதத்தின் பேரில் கொண்ட அபிமானத்தை வெளிப்படுத்த வேறு இடம் கிடைக்காமல் இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டார் போலும். இப்பொழுதும் நமது டாக்டரே வைத்திய மந்திரியாக அமர்ந்து வேலைபார்க்க நேரிட்டிருந்தால் அவர் கடாக்ஷம் ஆயுர்வேதத்தின் பேரில் நன்றாக விழுந்திருக்கும். அவ்விதம் நேராதது விதேச வைத்தியத்திற்குச் சிறிது துரதிர்ஷ்டமே. இருந்தாலும் அவர் உத்தேசத்தைப் பூர்த்தி செய்ய தன்னால் இயன்ற அளவு முயற்சிப்பார் என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

ஆயுர்வேதத்தை ஆதரிப்பவர்கள் ஓட்டுக்காக அதை உபயோகப் படுத்திக் கொள்வதாக டாக்டர் அவர்கள் புகார் கூறுகின்றார். நமது டாக்டர் அவர்களும் ஒருகாலத்

தில் (அதாவது முன்பு வைத்திய மந்திரி பதவி ஏற்பதற்கு முன்) ஆயுர்வேதத்தை மிகவும் புகழ்ந்ததும், வரவேற்புக் கமிட்டித் தலைவராக இருந்து மகாநாடு நடத்தியதும், ஆயுர்வேதத்தைத் தான் மிகவும் சிரத்தையுடன் படிப்பதாகவும் புஸ்தகம் எழுதப் போவதாகவும் பேசி வந்ததெல்லாம் ஒருவேளை ஓட்டுக்காகவே இருந்திருக்கலாம் என்று ஏன் எண்ணக் கூடாது? ஆகையால் அந்த பழைய தனது அனுபவத்தை யொட்டியும் ஒருவேளை அவர் தற்சமயமும் இவ்விதம் கூறியிருக்கலாம்.

டாக்டர் அவர்கள் சொல்லும் புகார் மிகவும் அர்த்தம் அடங்கியது என்று நாம் இவ்விடம் கூற விரும்புகிறோம். ஓட்டுக்காக ஆயுர்வேதத்தை உபயோகப்படுத்துவதற்கு, ஆயுர்வேத வைத்தியர்களின் சங்கியையும், அயல்நாட்டு முறைகளைக் கையாளும் வைத்தியர்களின் சங்கியையும் கணக்கிட்டுப் பார்த்தால், கொஞ்சமும் நியாயமில்லை. ஆகையால் டாக்டர் அவர்களுடைய் கருத்து ஆயுர்வேத வைத்தியர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களானாலும், ஜனங்களிடம் செல்வாக்கு மிகுந்தவர்கள் என்று தெளிவாகிறது. ஊர் ஊராக அபரிமிதமாய் அயல்நாட்டு முறையில் தர்ம வைத்தியசாலைகள் (Government and Local Fund Hospitals) இருந்தும், தேசிய வைத்தியர்கள் ஜனங்களிடம் தங்கள் செல்வாக்கை இனியும் ஏன் இழக்கவில்லை என்பதை டாக்டர் அவர்கள் யோசிக்காமல் இருந்திருக்க மாட்டார். அவ்விதம் நியாயமான முறையில் சிந்தனை செய்திருந்தால் டாக்டர் அவர்கள் இவ்விதம் சொல்லத் துணிந்திருக்கமாட்டார். விரோத மனப்பான்மையில் தான் இவ்விதம் பேச முன் வந்திருக்க வேண்டும் என்று எண்ணவேண்டி யிருக்கிறது. அது ஆயுர்வேதத்தின் பேரிலா அல்லது ஷ்டி வைத்தியத்தைக் கையாண்டு ஜனங்களின் அன்பை இழக்காமல் இருந்துவரும் வைத்தியர்களின் பேரிலா என்பது யோசிக்கவேண்டிய விஷயம்.

ஆனால், டாக்டர் அவர்களின் மனதில் எவ்விதமிருந்த போதிலும் அவருடைய வார்த்தைகளிலிருந்து ஆயுர்வேத வைத்தியத்தின் பேரில்தான் அவர் குறை கூறுவதாக



ஊஹிக்க முடிகிறது. ஆயுர்வேத வைத்தியத்தை ஆதரிக்கும் ஜனங்கள் எல்லோரும் ஞானசூன்யர்களாக இருப்பதாக டாக்டர் அவர்கள் அபிப்பிராயப் பட்டாலும் கூட, உயிரை இழப்பதற்கு ஒருவரும் தயாராக இல்லை என்பது அநேக வருஷகாலம் சஸ்திர சிகித்ஸையில் பழகிய டாக்டர் அவர்களுக்குத் தெரியாமல் இருக்கமுடியாது. ஆயுர்வேத வைத்தியத்தால் அபாயங்கள் இருக்குமானால் அது வெகு நாட்கள் முன்னதாகவே மறைந்திருக்கும். அநேக நூற்றாண்டுகளாக அரசாங்க உதவி இல்லாமல் இருந்துங் கூட அது ஜீவித்திருக்க வேண்டுமானால் அதில் குறையில்லாதது தான் காரணமாக இருக்கவேண்டும். ரோம், ஜப்பான் முதலிய தேசங்களில் கூட (Modern Scientific system of Medicine) அலோபதிக் முறையே அங்கீகரிக்கப் பட்டிருக்கிறதாக டாக்டர் அவர்கள் அபிப்பிராயப் படுவது அந்த தேசத்து பழைய வைத்திய முறைகள் நல்ல அஸ்திவாரத்தின் பேரில் அமைக்கப் படாததுதான் காரணமாக இருக்கவேண்டும் என்று ஏன் அவர் எளிதில் அறிந்து கொள்ள முன்வரவில்லை?

அடுத்தபடியாக, டாக்டரவர்கள் ஒரு பெரிய பதத்தை உபயோகித்து சபையோர்களைப் பிரமிக்கச் செய்வது மிகவும் கவனிக்கவேண்டிய விஷயம். அதாவது எந்த முறையும் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தால் தான் உலகத்துக்கு நன்மையை விளைவிக்கும் என்று பொருள்பட கோஷிக்கிறார். விஞ்ஞானம் (Science) என்ற பதத்தைக் கேட்டு எவரும் பிரமித்து விடக்கூடாது. டாக்டர் அவர்கள் அபிப்பிராயத்தில் 'விஞ்ஞானம். என்ற பதம் எந்தப் பொருளைக் குறிப்பிடுமோ?

88819

நமது சாஸ்திரத்தில் 'விஞ்ஞானம்' என்றால் பஞ்ச பூதங்களின் விசேஷ ஞானம். அதாவது, பிருதிவி முதலிய ஐந்து பூதங்களின் சேர்க்கையும், பிரிவும், அவற்றின் உட்பிரிவும், அவற்றின் குணங்கள், அவற்றின் இயற்கைக்கு மாறாக செயற்கை முறைகளால் வேறு குணங்கள் உள்ளவையாகச் செய்வது முதலியவற்றைக் குறிப்பிடுகின்றது. டாக்டர் அவர்கள் அபிப்பிராயத்திலும் 'விஞ்ஞானம்',

என்பது பஞ்ச பூதங்களை தூர வைத்துவிட்டு மானஸீக சக்தியால் உண்டுபண்ணப் படும் சிருஷ்டியாக இருக்காது என்றுதான் கருதவேண்டி யிருக்கிறது. ஏனென்றால், அவ்விதம் இருந்தால் அவர் அந்த பதத்தைத் ஸ்ரீநிவாஸ க்ளினிக்கைத் திறந்து வைக்கும் வைபவத்தில் சொல்லி யிருக்கவே முடியாது. ஏதாவது ஒரு யோகசாலையைத் திறந்து வைக்கும் வைபவத்திலோ, அல்லது ஸ்ரீ அரவிந்தர் முதலியவர்களின் லக்ஷியத்தைத் தீவ்ரமாகப் பின்பற்றும் கூட்டத்திலோ தான் குறிப்பிட்டிருக்க முடியும்.

மேனாட்டு வைத்திய முறையை பொது ஜனங்கள் ஆதரிக்க வேண்டும் என்ற பிரசாரத்திற்காகவே இந்த பதம் (Scientific system) உச்சரிக்கப் பட்டிருக்கிறது. இயற்கையின் அருளால் கிடைக்கும் விஞ்ஞானப் பொருள்களை உபயோகிக்கக் கூடாது என்று டாக்டர் அவர்கள் உத்திரவிடும் பக்ஷத்தில் நாம் ஒன்றும் பேசாமல் கையைக் கட்டிக்கொண்டு நின்று விடத் தான் வேண்டும். அவ்விதம் அல்லாமல் இயற்கை செயற்கை இருவித வழிகளையும், பின்பற்ற அனுமதி தருவாரேயானால், சில கேள்விகள் கேட்டு ஐயந் தீர்த்துக்கொள்ள நேரிடுகிறது.

ஆயுர்வேத விஞ்ஞானம் இயற்கை வழிகளையும் செயற்கை வழிகளையும் தழுவியே ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஒரு காலத்தில், வேலை நிறுத்தம் (Strike) வந்தால் கூட, செயற்கைப் பொருள்கள் கிடைக்காமல் போகலாம். அப்பொழுது Mag Sulphus போன்ற செயற்கைப் பொருள் இல்லாததனால் யாரும் பேதிக்குச் சாப்பிடாமல் இருக்கச் சொல்லுவது தானா வைத்தியர்களின் அழகு? ஒரு வஸ்துவை சூடு ஏற்றவேண்டுமானால் மின்சார சக்திதான் வேண்டும் என்று வாதிப்பதானால் அது விஞ்ஞானமாகிவிட முடியாது. சூரியன், அக்னி இவைகளாலும் அந்த காரியம் செய்ய முடியும் என்று தற்காலவிஞ்ஞானம் (Modern Scientific system) பற்றி பேசுகிறவர்கள் யோசிக்கவேண்டும். இந்தியாவில் இயந்திரங்களால் ஏற்பட்டிருக்கும் கெடுதல்களை பெரிய மகான்கள் எடுத்துச் சொல்லும் பொழுது அதுதான் விஞ்ஞானம்; "கையினால்



பட்டை போட்டு நூற்றால் நூலாகாது; அதனால் நெய்தால் துணியாகாது. உரலில் குத்தின அரிசி விஞ்ஞான அரிசி ஆகாது," என்று சொல்லுவது எவ்வளவு துணிவு?

ஆயுர்வேதத்தைக் குறித்து நமது டாக்டர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று அவரே பலதடவைகளில் சிலாகித்துப் பேசி யிருக்கிறார். ஆகையால் அது விஞ்ஞான முறையில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. என்றும் அவருக்குத் தெரிந்துதான் இருக்கும். நமக்காக ஒருவேளை தெரியாது என்று அவர் சொல்லுவாரானால், சிறிது சுருக்கமாக விளக்குகிறோம்.

ஆயுர்வேதம் மூன்று பிரிவுகளுடையது— 1. ஹேது, 2. லிங்கம், 3. ஔஷதம். ஹேது என்றால் காரணம். அதாவது வியாதி வருவதற்கு ஸன்னிகிருஷ்டநிதானம் விப்ரகிருஷ்டநிதானம் என்று இருவகைக் காரணங்கள் உண்டு. ஸன்னிகிருஷ்டநிதானம் என்றால் பக்கத்தில் இருக்கும் காரணம். விப்ரகிருஷ்டநிதானம் என்றால் எட்டி இருக்கும் காரணம். ஆகாரம், விஹாரம், தேசம், காலம் இவைகளால் கெட்டுப்போன பஞ்ச பூதங்கள் சரீரத்தில் வியாதிக்கு எவ்விதம் காரணமாக ஆகின்றன என்பதைக் குறித்து இந்தபாகம் விசேஷமாகச் சொல்லுகின்றது.

இரண்டாவது பிரிவு லிங்கம் அதாவது வியாதிகளின் குறி. இன்ன வியாதிக்கு இது ஆரம்பக் குறி, இது முன் குறி, இது கடுமை நிலைமையின் குறி, இது அஸாத்தியக் குறி, இது ஸாத்தியக் குறி முதலியவற்றைத் தெளிவாகக் கூறுகின்றது. இந்த பாகங்களுக்குத் தான் Pathology என்று மேனாட்டு வைத்திய முறையில் கூறுகின்றார்கள். இதற்காகத்தான் ஸ்ரீநிவாஸ க்ளினிக் ஏற்பட்டிருக்கிறது. இந்த விஷயங்களைக் குறித்து இன்று இருக்கும் நிலையை அனுஸரித்து ஆயுர்வேதத்தில் சொல்லப்பட்டிருந்தால் அது விஞ்ஞானமாகாதா?

மூன்றாவது பிரிவு ஔஷதம்— சிகித்ஸை, வியாதியைப் போக்கடிக்க வேண்டிய முறைகள். இது எட்டு விதம்: 1. காய சிகித்ஸை (பொது வைத்தியம்); 2. குழந்

தைகளின் வைத்தியம்; 3. கண்ணுக்குத் தெரியாத பூதங்களினால் ஏற்படும் வியாதிகளுக்குப் பரிஹாரம், (இது நவீன விஞ்ஞானத்தில் இல்லாத ஸூக்ஷ்ம விஷயம்); 4. கழுத்துக்கு மேற்பட்ட பாகங்களைப் பற்றிய வியாதிகளின் சிகித்ஸை; 5. விஷம், அதன் சிகித்ஸை; அதாவது எந்தெந்த சாமான்களால் செயற்கை விஷங்கள் ஏற்படுகின்றன. இயற்கை விஷங்கள் எவ்விதம், அவற்றின் பரிஹாரம் எவ்விதம் முதலியவை; 6. சல்யம்— சஸ்திர சிகித்ஸை. இதை ஒட்டியே சாரீர சாஸ்திரம்(Physiology), உடலமைப்பு சாஸ்திரம் (Anatorny), ப்ரஸூதி தந்திரம் (Midwifery) முதலியவைகளும் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது.; (சுச்ருதம் முதலிய நூல்களை டாக்டர் அவர்கள் பார்த்திருப்பார் என்று எண்ணுவதால் சுருக்கமாகக் குறிப்பிட்டோம்); 7. ஜரா— கிழட்டுத்தனம் வராமல் சரீரத்தைக் காப்பாற்றும் வழி; 8. விருஷ்யம்— ஆண், பெண்கள் இல்லற சுகத்தை நன்றாக அனுபவித்து நல்ல குழந்தைகளை அடையும் வழி. இவ்விதம் ஔஷதம் எட்டு பிரிவுகளை யுடையது.

ஔஷதம் என்று பெயர் வைத்ததாலேயே, ஔஷதங்களை எவ்விதம் தயார் செய்கிறது? அவை சரீரத்தில் எவ்விதம் வேலை செய்கிறது; பஞ்ச பூதங்களில் எந்த பூதம் சரீரத்திற்குத் தேவை; எது அதிகம், அதை எவ்விதம் சரீரத்துடன் நேராகச் சீர் செய்வது; ஒரு வஸ்துவுக்கு என்ன ரஸம்; அந்த ரஸத்துக்கு என்ன வீரியம், என்ன பிரபாவம் (அதாவது அபூர்வ சக்தி); அதில் என்ன பூதம் சேர்ந்திருக்கிறது; அதன் அசுத்த பாகம் என்ன, சுத்தபாகம் என்ன; அசுத்த பாகத்தை எவ்விதம் விலக்குவது, சுத்த பாகத்திற்கு அதிக குணம் எவ்விதம் உற்பத்தி செய்வது; எந்தமாதிரி சரீரத்தில் எவ்விதமான வஸ்து ஜீரணமாகி சரீரத்துடன் சேரும், எது சேராது; அதை அவசியமானால் எவ்விதம் சேர்ப்பது; தவறுதலாகச் சேர்த்தால் என்ன கெடுதல் வரும், அவ்விதம் கெடுதல் வந்தால் என்ன பரிஹாரம்; ஒவ்வொருவருடைய சரீரமும் எந்த அம்சத்தை அதிகமுடையது. அதாவது பிருதிவி, ஜலம்,



